Arimaa Nokku

18 : 3 அக்டோபர் 2024

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்




மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

ISSN 2320-4842

அரிமா
நோக்கு
18:3 அக்டோபர் 2024

ஆசிரியர்
ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாளர்
இரா. பன்னிருகைவடிவேலன்
253 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம்,
சென்னை 600 096
arimaanokku@gmail.com
+91 97766 30415

# பொருளடக்கம் CONTENTS


| | |
|---|---|
| தூர்வை நாவலில் மெய்ப்பாடு உணர்வுகள் - ரா. சத்தியசீலா | 05 |
| மணிமேகலையில் வாழ்வியல் கூறுகள்- முனைவர் ஏ.ஜான்சி மேரி | 11 |
| கவிஞர் மனுஷ்ய புத்திரன் கவிதைகளில் இயற்கைச் சூழலும் மனித வாழ்வியலும் - திரு. இரா. ஆதிகேசவன் | 18 |
| தனித்தமிழ் இயக்க இதழியல் வரலாறு: பெண் இதழாளர்கள் - முனைவர் ஜெ. மதிவேந்தன் | 23 |
| பழங்காலத் தமிழர்களின் விளையாட்டுக்கள் - திருமதி க. மாலதி | 29 |
| மருதத் திணையில் உழவும் உணவும் - நா. வடிவுக்கரசி | 33 |
| எட்டுத்தொகையில் அக இலக்கியங்கள் காட்டும் தமிழர் பண்பாடு முனைவர் கே. சி. ஆர். விஜி | 38 |
| புறநானூற்றில் பெண் மறம் - திருமதி. மு. நாகலட்சுமி | 42 |
| சமகால சிறுகதைகள் சித்தரிக்கும் நவீனத் தமிழ்ச் சமூகம் ம. பரிமளா தேவி | 47 |
| சிற்பியின் கவிதைகளில் அறிவியல் பார்வை ஜூ. சவரியம்மாள் | 51 |
| Political communication on Triangular anthology: An impact of BBC Documentary in India - Gowtham Raja Sathish | 57 |
| Artificial Intelligence in Administration: Enhancing Efficiency, Transparency, and Citizen Engagement - Dr. K. Premavathi | 62 |
| ஃப்ராய்டிய கோட்பாட்டின் வழிச் சங்க இலக்கியக் கனவோடை வே. செல்வநதி | 64 |
| "From Traditional Festivals to Modern Gatherings: The Evolution of Events as Platforms for Business Promotion" Dr. Sivachander, G | 68 |
| பூமணியின் சிறுகதைகள் உணர்த்தும் கரிசல் நிலச்சமுதாயம் திரு. நா. முருகன் | 73 |
| பெருமாள்முருகன் சிறுகதைகளில் பண்பாட்டுக் கூறுகள் மு. பொன்னி - முனைவர் மு. தமீம் மன்சூர் | 77 |
| அவலநிலையை முன் வைத்து - தூப்புக்காரி நாவல் பெ. சிவசக்தி - முனைவர் வி. கலாவதி | 81 |
| எழுத்து சி சு செல்லப்பாவின் படைப்பியல் -முனைவர் த. முத்துலட்சுமி | 83 |
| சங்க இலக்கியங்களில் குரவைக்கூத்து -முனைவர் ஏ. மேரி நேசபிரியம் | 87 |
| மனிதன் வாழ்க்கையில் திருவள்ளுவர் காட்டும் மருட்கை (மயக்கம்) ச.பாலசரஸ்வதி | 91 |
| பாரதியின் அறிவியல் பார்வை -முனைவர் மு. கோவிந்தராஜுலு | 93 |
| ஈழக்கவிதைகள் - ஒரு பார்வை ஜோ. இலங்கோவன் - வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் | 95 |
| தாலாட்டுப் பாடல்களில் உளவியல் - கி. சுப்பிரமணி | 98 |
| கரன் கார்க்கியின் கறுப்பு விதைகள் நாவலின் சமுதாயம் சா. பிரியா | 101 |
| சங்க இலக்கியத்தில் அறக்கருத்துக்கள் - முனைவர் பா. அருள்ஜோதி | 105 |
| எஸ். அர்ஷியாவின் பார்வையில் பெண்கள் க. சரவணன் - முனைவர் த. பரமேஸ்வரி | 111 |
| பெருங்கதையில் நரவாணக் காண்டத்தில் நகை அ. சக்திவேல் - முனைவர் த. பாலமுருகன் | 115 |
| இனியவை நாற்பது புலப்படுத்தும் தன்னுணர்வு (Feeling of self) திரு. சி. குமரகணேஷ் | 118 |
| இரா.பிரேமாவின் சிறுகதைகளில் பெண்ணியம் திருமதி அ.மகேஸ்வரி - முனைவர் த. கீதாஞ்சலி | 121 |
| திருத்தொண்டத்தொகை காட்டும் பக்தியுணர்வு பா. தன்ராஜ் - முனைவர் எ. கற்பகம் | 125 |
| இனக்குழுச் சமுதாய வாழ்க்கையில் குறுநில மன்னர்கள் முனைவர் க. இராஜா | 129 |
| அவல வீரன் - கோவலன் - முனைவர் த. ராதிகா லட்சுமி | 132 |
| கூகி வா தியாங்கோவும் தமிழறிஞர் அயோத்திதாசப்பண்டிதரும் முனைவர் ந இரகுதேவன் | 136 |
| பெண்களின் ஆளுமை - முனைவர் து. விசாலாட்சி | 143 |
| சங்க இலக்கியத்தில் புறத்திணை வாழ்வியல்கள் முனைவர் இரா.அன்சல்யா | 147 |
| சங்க இலக்கியத்தில் அவரை - முனைவர் செ. இளையராஜா | 151 |
| வாழ்வியல் கோட்பாட்டில் உண்ணா நோன்பு குறித்து ஓர் ஆய்வு முனைவர் செ. மகேஸ்வரி | 156 |
| பெண்ணியப்பார்வையில் தமிழ் நாவல் இலக்கியங்கள் - ஓர் ஆய்வு திரு. இல.பூவலிங்கம் - முனைவர் மா.ஜெயச்சந்திரன் | 160 |
| தமிழச்சி தங்கபாண்டியனின் வனப்பேச்சிக் காட்டும் நடப்பு நிகழ்வுகள் கு. நனினி | 164 |

ISSN 2320-4842

# அவல வீரன் - கோவலன்

முனைவர் த. ராதிகா லட்சுமி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி.

காப்பியங்கள் சிறப்புற கதைக்கரு, பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் போன்றவை செம்மையாக அமையவேண்டும். பாத்திரப்படைப்பின் வாயிலாகவே கதைக்கரு மக்களின் மனதில் நிலைபெறுகின்றது. குறிப்பாக பாத்திரப்படைப்பில் அவலவீரர்களின் தன்மையே நிலை பெறுதலுக்கு காரணமாகும். காப்பியங்களில் ஏனைய பாத்திரங்களைக் காட்டிலும் அவலப்பாத்திரங்கள் நம் நெஞ்சை பெரிதும் கவர காரணம் என்னவென்றால் வாழ்க்கை யின் பேருண்மைகள் இவர்களின் வாயிலாகவே வெளிப்படுகின்றன. இதன் அடிப்படையில் சிலப்பதிகார கதாபாத்திரங்களில் கோவலன் ஒரு அவலவீரனாக திகழ்வதை இக்கட்டுரை யில் காண்போம்.

### அவலச்சுவை

தொல்காப்பியர் அவலப்பாத்திரத்திற்கு என தனி இலக்கணத்தை வகுக்கவில்லை எனினும் அழுகையின் நிலைக்களன்களின் ஒன்றான அசைவு என்பது அவலப்பாத்திரத்தைக் குறிப்பதாகவுள்ளது. அசைவு என்பது பண்டைய நிலைமை கெட்டு வேறொருவராகி வருந்தும் நிலையாகும். சிறந்த பண்பு நலன்களைப் பெற்றிருக்கும் கதைமாந்தர் தம்மை அறியாது செய்யும் குறைகளால் வீழ்ச்சியுற்று வேறொருவராகி தம் நிலையை எண்ணி வருந்தும்போது வாசகர்களின் மனதில் இரக்கம் தோன்றுகிறது. அக்கதைமாந்தர் அழியும் பொழுது அவனை அழிக்கும் சக்தியைக் குறித்து பேரச்சம் வாசகர்களிடையே உருவாகிறது. அவ்வகையில் உயரிய நிலையில் இருந்து தாமிழைத்த தவறுகளால் வீழ்ச்சியுற்ற கதாபாத்திரமாக கோவலனைக் குறிப்பிடலாம்.

இளங்கோவடிகள் கோவலனை மங்கல வாழ்த்துக் காதையில் மணமகன் நிலையில் அறிமுகப்படுத்துகின்றார். வணிகத்தின் பொருட்டு பல நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டியதோடு பெரும்புகழையும் ஈட்டி வந்தவன். மேலும் பூமியும் சிறிது என்று சொல்லும்படியாக பெரும் புகழை உடையவன். நிலவுலக மகளிர் அவனை கண்ணாரக் கண்டு 'யாவராலும் போற்றப்படும் செவ்வேள் இவனே' என்று கூறுவர். இவ்வாறு அழகிலும், அறிவிலும், பண்பிலும் சிறந்து விளங்கியவன் கோவலன். இவனுடைய 'மண் தேய்த்த புகழினை' இளங்கோவடிகள் புகார்க்காண்டத்தில் குறிப்பிடவில்லை. ஆனால் மதுரைக் காண்டத்தில் மாடலன் வாயிலாக கோவலனின் அரும்பெரும் பண்புகளை விளக்குகின்றார்.

### கருணை மறவன்

கோவலன் தனக்கும் மாதவிக்கும் பிறந்த குழந்தைக்கு தன்னுடைய முன்னோர்களைக் காத்த மணிமேகலா தெய்வத்தின் பெயரையே சூட்டுகின்றான். இது அவன் முன்னோர்களின் மீது கொண்ட பற்றையும், தெய்வபக்தியையும், நன்றிக்கடனையும் வெளிப்படுத்துகின்றது. மணிமேகலை பிறந்த நாளன்று மாதவியுடன் செம்பொன்னை வறியவர்களுக்கு வாரி வழங்குகின்றான். அப்போது வளைந்த உடலும், தளர்ந்த நடையும் கொண்ட முதியவர் ஒருவர் தானம் பெற வருகின்றார். அப்போது மதம் கொண்ட யானை அந்த முதியவரைப் பற்றிக்கொள்ள கோவலன் அந்த யானையின்மீது பாய்ந்து அதன் பிடரியில் அமர்ந்து அதனை அடக்கி முதியவரைப் பாதுகாக்கின்றான். இளமையான கோவலன் தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது யானையை அழித்து முதியவரைப் பாதுகாத்ததில் அவனு டைய பண்பு நலன் வெளிப்படுகிறது. அதாவது பிறர் துன்பம் கண்டபோது தன்னையும் அறியாமல் அவர் துன்பத்தைப் போக்கும் பண்பும், வீரமும் புலப்படுகின்றது. பொருளை மட்டும் வாரி வழங்காமல் தன் உயிரையும் பொருட்படுத்தாது அவன் செயல்பட்டதில் அவனுடைய வீரமும் கருணையும் வெளிப்படுகின்றது.

ISSN 2320-4842

## செல்லாச் செல்வன்

பார்ப்பனி ஒருத்தி காப்ப வளர்த்த கீரிப் பிள்ளையை தவறாக கருதிக்கொன்று விட அதனை அறிந்த அவள் கணவன் அவளை வெறுத்து ஒதுக்கின்றான். அதற்காக அவன் கங்கையில் நீராடச்செல்கின்றான். அவ்வாறு அவன் செல்லும் பொழுது வடமொழி வாசகம் எழுதிய ஏடு ஒன்றை அவள் கையில் கொடுத்து இதன்பொருளை அறிந்து உதவும் மாந்தரிடம் இதை கொடுப்பாயாக' என்று கூறிப்பிரிகின்றான். தெருவில் அலைந்து திரிந்த பார்ப்பனியின் துன்பத்தினை அறிந்து கோவலன் அந்த ஏட்டில் உள்ளபடி தானம் பல செய்து கானகத்திற்கு சென்று அவன் கணவனையும் அழைத்து வந்து பொருள் கொடுத்து இருவரையும் ஒன்றாக வாழும்படி செய்கிறான். பொருள் இல்லார்க்கு மனமுவந்து பொருளை வரையாது வழங்குவதால் கோவலனை மாடலன் 'செல்லாச் செல்வன்' என குறிப்பிடுகிறான். எப்போதும் குறையாத செல்வத்தை உடையவன் என்பதே இதற்கான பொருள். இதனால் கோவலன் வடமொழிப் புலமை வாய்ந்தவன் என்பதோடு பிறருடைய துன்பத்தைக் களையக்கூடிய பண்பட்ட உள்ளத்தையும் வள்ளல் தன்மையையும் உடையவன் என்பதும் புலனாகின்றது.

## வரையாது வழங்கும் வள்ளல்

கயவன் ஒருவன் பத்தினிப்பெண்ணின் மீது தவறான பொய்ப்பழியைச் சுமத்துகின்றான். அதற்கு அறிவில்லாத ஒருவன் பொய்ச் சான்று கூறுகின்றான். இந்த பாவத்திற்காக சதுக்க பூதம் அவனை தன் கையகப்படுத்தி கொன்று தின்னமுற்படுகின்றது. அவனுடைய தாய் அதனைக் கண்டு கதறி அழுகின்றாள். அவனுடைய தாய்படும் துன்பத்தைக் கண்டு இரக்கமுற்ற கோவலன் 'என்னுயிர் கொண்டு இவனுடைய உயிரைத் தா' என கேட்கின்றான்.

"நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்டீங்கில்லை"

(சிலப்பதிகாரம்-அடைக்கலக்காதை, பா.அ. 81-85)

இதற்கு சதுக்கபூதம் மறுத்துவிட்டதுடன் கோவலன் உயிரை நல்லுயிர் என கூறுவது குறிப்பிடத்தக்கது. பூதத்தால் விழுங்கப்படுபவனின் உயிரைக் காக்க தன்னுடைய உயிரையே இழக்கமுற்படுகின்றான் கோவலன். இது அவனுடைய கருணையை வெளிப்படுத்துகின்றது. மேலும் மகனை இழந்த தாயையும், அவள் தன் உறவினர், சுற்றத்தாரையும் பல்லாண்டு பாதுகாக்கின்றான்.

கோவலன் கண்ணகியுடனும், கவுந்தியடிகளுடனும் மதுரையை நோக்கி செல்லும் வழியில் அங்குள்ள இசைப்பாணரோடு யாழ் இசைப்பதில் இருந்து எளியவரிடத்தும் வேற்றுமையின்றிப் பழகும் பண்புடையவன் என்பது புலனாகின்றது. மேலும் செல்லும் வழியில் வம்பப்பரத்தையும், வறுமொழியாளனும் தவறாகப்பேச கோபம் கொண்ட கவுந்தியடிகள் அவர்களை முள்ளுடைய முதுகாட்டில் நரிகளாகும்படி சபிக்கின்றார். அப்போது அருள்நெஞ்சம் கொண்ட கோவலன் இவர்கள் நெறியில் நீங்கி அறியாமையினாலே இத்தகைய செயலை செய்தனர். இவர்களுடைய உய்திக்காலத்தை உரைத்தருள்வீர்' என கேட்டதில் கொடியவருக்கும் அருள்தன்மை உடையவனாக கோவலன் இருப்பது புலனாகின்றது.

## பெருந்தகையாளன்

இவ்வாறு தெய்வ பக்தி, நன்றி உணர்வு, கருணை மறவன், வரையாது வழங்கக்கூடிய வள்ளல், அனைவரிடமும் இனிமையாக பழகும் பண்பு, கொடியவர் மீதும் அன்பு கொள்ளக்கூடிய உணர்வு போன்ற பல நற்பண்புகளைக் கொண்டு விளங்கும் கோவலன் கண்ணகியிடத்து அன்பு கொண்டவனாக விளங்குகின்றான். அக்கால சமுதாயம் பரத்தையரை நாடுவதை கடியவில்லை. இவன் ஆயிரத்தெண் கழஞ்சுபொன் வழங்கி மாதவியை அடைகின்றான். ஆனால் மறுநாள் கண்ணகியை நாடாமல் பல ஆண்டுகள் அங்கேயே அவன் வாழ்ந்து விடுகின்றான். இத்தகைய நெறிப்பிறழ்வே அவன் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தியது என கொள்ளலாம். பெருமைக்குரிய கோவலன் இந்த தவறினால் வீழ்ச்சியுறுகின்றான். மீண்டும் கண்ணகியை அடைந்த கோவலன் தான் செய்த தவறுக்காக வருந்துகின்றான். தான் இழந்த பொருளை மீட்கும் பொருட்டு வாணிபம் செய்வதற்காக மதுரையை நோக்கி புறப்படுகின்றான். பொருள் தேடி செல்லும் பொழுது மனைவியை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. மாறாக கோவலன் மனைவியை அழைத்துச் செல்கின்றான். கண்ணகிக்கு தான் இழைத்த துன்பத்தினை நினைத்து வருந்தும் கோவலன் கவுந்தியடிகளிடம்,

"நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி
நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த

ISSN 2320-4842

அறியாத் தேயத் தாரிடை யுழந்து
சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்

(சிலப்பதிகாரம் – ஊர் காண் காதை, பா.அ. 17-20 )

உரைக்கிறான். இவற்றால் தான் செய்த தவற்றை நினைத்து வருந்தும் தன்மை உடையவன் கோவலன் என்பது புலனாகின்றது. தவறு செய்வது மனித இயல்பே ஆகினும் செய்த தவற்றை நினைத்து வருந்தும் பண்பு பெருந்தகை யாளனுக்கு உண்டான பண்பாகும். இத்தகைய பெருந்தகையாளனான கோவலன் அடைந்த துன்பம் அவலத்தைத் தோற்றுவிக் கிறது.

## நெஞ்சை உருக்கும் சொற்கள்

மாதரி வழங்கிய பொருட்களைக் கொண்டு கண்ணகி தன் மெல்லியவிரல் சிவக்கவும், முகம் வியர்க்கவும், கண்கள் சிவக்கவும் சமைத்த உணவினைக் கோவலனுக்குப் படைக்கின்றாள். கோவலன் அதை மகிழ்ந்து உண்கின்றான். இதனை இளங்கோவடிகள் அழகுபட சித்தரிப்பதன் வாயிலாக கோவலன் இறப்புக்குப்பின் ஏற்படும் அவலச் சுவையை அதிகப்படுத்த முற்படுகின்றார். உணவினை உட்கொண்ட கோவலன் கண்ணகியைத் தன்னருகே அழைத்து தான் அவளுக்கு அளித்த துன்பத்தினைக் குறித்து வருந்துகிறான். பெற்றோருக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளை அவன் செய்யா மல் போனதையும், அறிவு பெற்ற கண்ணகி க்கு அவன் செய்த கொடுமையையும் நினைத்து வருந்துகிறான். கண்ணகியிடம், 'இருமுதுகுரவரும் அவ்வப்போது என்னை திருத்துவதற்காக ஏவிய ஏவல்களையும் நான் செய்யாது போனேன். அறிவில் சிறந்த, அறியாத சிறுபருவத்திலான உனக்கும் சிறுமைகளையே செய்தேன். உன்னை உடன் வருக என்று அழைப்பதும் தவறு என்று நினைக்காமல் இச்செயலை செய்துவிட்டேன். நீயும் புறப்படுக என்றவுடன் என்னுடன் வந்து விட்டனையே' என்று பலவாறாக கூறி தன்னுடைய தவறான, பொருந்தாத செயல்க ளுக்காக வேதனை அடைகின்றான். கோவல னின் இந்த வேதனை மிகுந்த சொற்கள் இரக்கத்தைத் தோற்றுவித்து நம்முடைய நெஞ்சை உருக்குகின்றன.

"அவலத் தலைவன் தன் தவறு உணருதலைக் கிரேக்க மொழியில் அநெக்நாரிஸில் (Anagnorisis) என்பர். இங்குக் கோவலன் அழிவு நெருங்குவதற்கு முன்பே தன் தவற்றை உணர்ந்தான். இதனால் தனக்கு நேரும் அழிவினை அவன் தவிர்த்திருத்தல் வேண்டும். ஆனால் அந்தோ! கோவலனால் தன் அழிவினைத் தவிர்க்க முடியவில்லை. இதை நினைக்கும்போது அவன்பால் நமக்கு எல்லையற்ற இரக்கம் பிறக்கிறது"

(ஞானமூர்த்தி தா.ஏ-அவல வீரர்கள்,பக்.- 34)

என்று டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி உரைப்பது உற்று நோக்கத்தக்கது. கண்ணகி யாருடைய துணையும் இல்லாமல் தன்னுடன் வந்து துயரடைந்த தன்மையை நினைத்த கோவலன் அவளைப் போற்றி பாராட்டுகின்றான். அணையப் போகும் சுடர் நன்கு எரிந்து அணைவது போன்று கோவலன் கண்ணகியிடம் அதிகமான அன்பினை வெளிப்படுத்தியவனாக அவளை இறுகத்தழுவிப் பிரிகின்றான். கோவலனின் சிலம்பைக் கண்ட பொற்கொல்லன் பாண்டி யனிடத்தில் பழியுரைக்க. அவனும் ஆராயா மல் கள்வனைக் கொல்க என ஆணையி டுகின்றான். கோவலனின் வெட்டுண்ட உடலிலிருந்து குருதி வெளியேறியது என்றும். நிலமடந்தை பெருந்துயரமுற்றாள் என்றும் இளங்கோவடிகள் கூறுவது துன்பப்பெருக் கினை அதிகரிக்கிறது. கோவலன் தான்செய்த தவறினை உணர்ந்து கண்ணகியிடம் அன்போடு உரையாடி பிரிந்து உயிரை விட்டதில் துன்பம் மிகுகிறது. இத்தகைய வீழ்ச்சி குறித்து.

"ஒருவன் வியாதி வாய்ப்பட்டோ. வறுமை க்கு உள்ளாகியோ, கவலைக்கு இரையா கியோ அல்லது அற்ப ஹிம்சைகளுக்கு ஆளாகியோ நைந்து கழிந்து நலிவுற்றால். அதில் கூட அவ்வளவு தூரத்திற்குச் சோக ரஸ அழுத்தம் கிடையாது. மற்றும் இடி. மின்னல். வெள்ளம். சூறாவளி போன்ற இயற்கை விபத்துகளுக்கு இரையானாலும் அதிலும் சோகரஸம் அவ்வளவு அழுத்தம் பெறவில்லை. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என்று நியதிக்குக் கட்டுப்பட்ட மனிதன், அதிலும் உயர்ந்த நிலையில் வாழும் மனிதன், அவனுடைய செயலின் காரணமாகவே இன்னல்களைச் சம்பாதித்து அவைகளை மதியாமல் அவைகளோடு தைரியமாகப் போரிட்டு முடிவில் அந்த இன்னல்களுக்கு இரையாகி இறந்துபடும் நிலைதான் சோக ரஸத்திற்கு மிகவும் அழுத்தம் கொடுக்கும்" (முத்துசிவன். ஆ- அசோகவனம், பக்.70)

என ஆ.முத்துசிவனின் கூற்று இங்கு உற்று நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது. கோவ

இவ்விறப்பினை சற்றும் எண்ணி
லன் இருக்க மாட்டான். மதுரை மாநகரில் ஒரு
இருக்க மாட்டான். கண்ணகி நடுங்குத் துயர்
கீழ்மகனால் தான் உடுத்திருந்த ஆடை பிறரால்
எய்தவும். தான் உடுத்திருந்த ஆடை பிறரால்
பற்றிக்கொள்ளப்படவும் தான் எருமைக்
கடாவின் மீது ஊர்ந்து வந்ததுமாக கனவி
னைக் கண்டபோதும் அது துன்பத்தைத்
தரும் என்று எண்ணி இருப்பானே தவிர
அது தன்னை இறப்பில் கொண்டு
செலுத்தும் என்பதை எதிர்பார்த்து இருக்க
மாட்டான். கோவலன் இந்த துன்பமுடிவு
பாண்டியநெடுஞ்செழியனையும், கோப்பெருந்
தேவியையும், மாதரியையும் இறக்கச்
செய்கின்றது. காப்பியத்தின் இப்பகுதி
படிப்பவர்களிடையே அதிகமான இரக்கத்தை
உருவாக்கும் என்பது உறுதி. கோவலன்
கொலைஞர்களுடன் பேசி தான் குற்றமற்ற
வன் என நிறுவியிருக்கக் கூடாதா? என்று
கருதலாம். ஆனால் எச்சொல்லையும் பேசிய
தாக இளங்கோவடிகள் அமைக்கவில்லை.
ஒருவேளை அதிர்ச்சியினாலோ அல்லது
அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள்
என்பதாலோ. ஊழினாலோ. தான் செய்த
தவறுக்கு தண்டனை என ஏற்றுக் கொண்ட
தாலோ கோவலன் அமைதி காத்திருக்க
லாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

"எந்த காவிய வீரனும் காணாத துன்ப
வாழ்க்கை, வாழ விரும்பும் எந்த மனிதனும்
எண்ணிகூடப் பார்க்க விரும்பாத துயர
முடிவு. இவையே கோவலன் கண்ட வாழ்வு!
அவன் மனையற்ற மாண்பும் மாதவியுட
னான காதல் ஊடாட்டமும் இந்தக் கோர
முடிவைத் தூக்கி எடுத்துக் காட்டுவதற் குரிய
காவிய முன்னணி வண்ணம். துணையணி
வண்ணமேயன்றி வேறல்ல"

(கா.அப்பாதுரை -கோவலன் குணக்குன்று.
ப.எ-56)

என கா. அப்பாதுரை கூறியது இங்கு ஒப்பு
நோக்கத்தக்கது. சமுதாயத்தில் அனைவரும்
போற்றும் உயர்ந்த நிலையில் இருந்த
கோவலன் தான் செய்த தவறினால்
வீழ்ச்சியடைகின்றான். அச்சமும், இறக்கக்
கூடாத பண்புநலனும் வாய்ந்தவனின் இறப்பு
முறையற்றது. அதனால் அவன் மீது இரக்கம்
கொள்கின்ற வண்ணம் கோவலனின்
பாத்திரப்படைப்பை அவலம் உடையதாக
இளங்கோவடிகள் அமைத்துள்ளார்.

## தொகுப்புரை

கோவலன் வள்ளல் தன்மையிலும். அனை
வருக்கும் இரங்கும் பான்மையிலும். வீரத்தி
லும் சிறந்து விளக்குகின்றான். தன்னுடைய
துன்ப நிலையிலும் பாணர்களிடையே
அவன் யாழ் இசைப்பதன் வாயிலாக அவன்
பெருங்கலைஞன் என்பதை உணர முடிகிறது.
கண்ணகியைப் பிரிந்து தான் செய்த
தவறுக்காக கவுந்தியடிகளிடம் வருந்துபவ
னாகவும் விளங்குகின்றான். சதுக்கப்பூதமே
அவனை 'நல்லுயிர்' என்று பாராட்டுகிறது.
இத்தகைய பண்பாளனான கோவலன்
கற்பில் சிறந்த தன் மனைவி கண்ணகியை
விடுத்து மாதவியை அடைந்த வாழ்க்கை
ஒன்றையே குறையாகக் கொள்ளலாம்.
கோவலன் தன் தவறை உணர்ந்து அந்த
தவற்றால் அவனுக்கு நேர்ந்த இழிவையும்
இழப்பையும் ஈடுசெய்யும் முயற்சியில்
முனைந்தான். ஆயினும் 'ஊழின் பெருவலி
யாவுள' என்பதற்கு இணங்க அவன் உயிர்
பிரிந்தது. கோவலனின் அழிவு அவலத்திலும்
பேரவலமாகும். சிலப்பதிகாரத்தில் கோவல
னின் பாத்திரப்படைப்பை ஆராயும் போது
கோவலன் ஒரு அவல வீரனாக திகழ்வது
புலனாகின்றது.

## துணை நூல்கள்

1. இராமகிருஷ்ணன்.எஸ் - இளங்கோவின் பாத்திரப் படைப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2015.
2. கந்தசாமி சோ.ந - புரட்சிக்காப்பியம். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
3. கோபிநாத்.அ - தமிழ்க்காப்பியங்களில் அவலச்சுவை, இந்திரா பதிப்பகம், திருச்சி. 2000.
4. சஞ்சீவி .ந -சிலப்பதிகார விருந்து, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை, 2014.
5. சிவஞானம் ம.பொ- சிலப்பதிகாரத் திறனாய்வு. பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2007
6. ஞானமூர்த்தி தா.ஏ- அவல வீரர்கள். ஐந்திணைப்பதிப்பகம், சென்னை, 1992.
7. புலியூர்க்கேசிகன்(உ.ஆ) - சிலப்பதிகாரம். கௌரா புத்தக மையம், திருச்சி, 2017.
8. மாணிக்கனார் .வ.சுப - எந்தச் சிலம்பு. பாவை பப்ளிஷர்ஸ், சென்னை, 2011.
9. மீனாட்சி சுந்தரனார் தெ.பொ - குடிமக்கள் காப்பியம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2010.
10. முத்துசிவன்.அ - அசோகவனம், ஸ்டார் பிரசுரம், திருச்சி,1947.